பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

06 12 2025 12 40

சனிக்கிழமை நண்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான வழிகாட்டியாக பாரத் ரத்னா அம்பேத்கரின் சிந்தனைகள் உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. இண்டிகோ நிறுவனத்தின் விமான சேவை இன்று முதல் மேம்படத் தொடங்கும் என்று சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

3. திமுக வாக்கு வங்கி அரசியலில் ஈடுபட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

4. இலங்கையில் டிட்வா புயலால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 607ஆக அதிகரித்துள்ளது.

5. Super Pog செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Samay Raina பட்டம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான வழிகாட்டியாக பாரத் ரத்னா அம்பேத்கரின் சிந்தனைகள் உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அம்பேத்கரின் நினைவு தினத்தையொட்டி வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக மாண்புகளைக் காப்பதில் அவரது சிந்தனைகள் இன்றளவும் நமக்கு ஊக்கமளிப்பதாக உள்ளது என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

மத்திய அமைச்சர்கள், மாநிலங்களின் முதலமைச்சர்கள் மற்றும் பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் இந்நாளையொட்டி அம்பேத்கருக்கு புகழாரம் சூட்டியுள்ளனர்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி அரசியல் சாசனத்தை புனித நூலாகக் கருதி பணியாற்றி வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்த அவர், பாரத் ரத்னா அம்பேத்கருக்கு மத்திய அரசு உரிய மரியாதை வழங்கி வருவதாக கூறினார்.

இது தொடர்பாக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி தெரிவித்த கருத்துகள் ஏற்புடையதல்ல என்றும், அவருடைய கருத்துகள் குறித்து யாரும் கவலைப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

வாக்கு வங்கி அரசியலைக் கருத்தில் கொண்டே திமுக செயல்படுவதாக அவர் குற்றம் சாட்டினார்.

மதுரை திருப்பரங்குன்றத்தில் கார்த்திகை தீபம் ஏற்றுவது தொடர்பான விவகாரத்தில் திமுக அரசின் செயல்பாடுகள் கண்டிக்கத்தக்கது என்றும் அவர் தெரிவித்தார்.

இதில் வழிபாட்டு உரிமை மறுக்கப்பட்டதோடு, பிஜேபி தலைவர்களும் கைது செய்யப்பட்டதாகவும் டாக்டர் எல். முருகன் தெரிவித்தார்.

<<<<>>>>

2036ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி இந்தியாவில் நடைபெற வாய்ப்புள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அகமதாபாதில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், 2030ஆம் ஆண்டு காமன்வெல்த்த விளையாட்டுப் போட்டிகள் அகமதாபாதில் நடைபெற உள்ளதை சுட்டிக்காட்டினார்.

இதேபோல் ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கான உரிமையும் அகமதாபாதிற்கு கிடைக்கும் என்று திரு. அமித் ஷா கூறினார்.

<<<<>>>>

நாட்டின் பொருளாதார வளர்ச்சி சீராக உள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நாளிதழ் ஒன்று ஏற்பாடு செய்திருந்த மாநாட்டில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

நடப்பு நிதியாண்டில் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி 7 சதவீதத்திற்கு கூடுதலாக இருக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

மாநில அரசுகள் கடன் வாங்கி இலவச திட்டங்களை செயல்படுத்துவது கவலையளிக்கக் கூடியது என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் கூறினார்.

<<<<>>>>

வேளாண் துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து ரஷ்ய வேளாண் அமைச்சர் Oksana Lut உடன் விரிவாக விவாதித்ததாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனைப் பதிவு செய்துள்ள அவர், நவீன வேளாண்மை, புதுமைக் கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சிப் பரிமாற்றம் போன்றவற்றிற்கான வாய்ப்புகள் குறித்து ஆலோசிக்கப்பட்டதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கு இடையேயான வேளாண் வர்த்தகத்தை அதிகரிப்பது குறித்தும் விவாதிக்கப்பட்டதாக திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனம் ஆயுதப் படைகளுக்கு ஏழு தொழில்நுட்பங்களை வழங்கியுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

தொழில்நுட்ப மேம்பாட்டு நிதியத்தின் கீழ் இவை உருவாக்கப்பட்டதாக பாதுகாப்புத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பாதுகாப்பு படைகளை நவீனமயமாக்குவதற்கான் பணிகளில் இது முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஏற்றுமதியை அதிகரிப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதற்கென 25 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் ஏற்றுமதி ஊக்குவிப்பு இயக்கத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதன் மூலம் சிறு குறு தொழில் நிறுவனங்கள் கூடுதல் பயனடையும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

இண்டிகோ நிறுவனத்தின் விமான சேவை இன்று முதல் மேம்படத் தொடங்கும் என்று சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த அவர், விமான ரத்து காரணமாக பயணிகள் காத்திருக்கும் சூழல் இன்று ஏற்படாது என்று நம்பிக்கை தெரிவித்தார்.

நிலைமையை தமது அமைச்சகம் உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

இதற்கிடையே சென்னை விமான நிலையத்தில் இண்டிகோ விமானங்கள் இன்று அதிகாலை முதல் இயக்கப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte - Sureka - 58 Sec)

இந்நிலையில் விமானப் பயணிகளுக்கு உதவும் வகையில் பல்வேறு ரயில்களில் கூடுதல் பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ளதாக ரயில்வே தெரிவித்துள்ளது.

தெற்கு ரயில்வேயில் மட்டும் 18 ரயில்களில் கூடுதலாக பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ளதாக ரயில்வேயின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<>>>>

உத்தராகண்டில் தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டு வருவதாக அம்மாநில முதலமைச்சர் திரு. புஷ்கர் சிங் தமி கூறியுள்ளார்.

டேராடூனில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் வழிகாட்டுதலின்படி மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டு வருவதாக கூறினார்.

விவசாயிகளுக்குத் தேவயான அனைத்து உதவிகளையும் தமது அரசு வழங்கும் என்றும் திரு. புஷ்கர் சிங் தமி தெரிவித்தார்.

<<<<>>>>

டிட்வா புயலால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று இந்தியா கூறியுள்ளது.

கொழும்பில் இலங்கைக்கான இந்திய ஹைகமிஷனர் திரு. சந்தோஷ் ஜா, அந்நாட்டு தலைவர்களிடம் இதற்கான உறுதியை வழங்கினார்.

இதற்கிடையே இந்தப் புயல் பாதிப்பு காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கை 607ஆக அதிகரித்துள்ளதாக இலங்கை அரசு கூறியுள்ளது.

<<<<>>>>

இந்தியா - Eritrea இடையேயான வெளியுறவுத்துறை அதிகாரிகள் இடையேயான பேச்சுகள் Asmara-வில் நடைபெற்றன.

இரு நாடுகளுக்கு இடையேயான உறவை மேலும் வலுப்படுத்துவதென இந்தப் பேச்சுகளின்போது தீர்மானிக்கப்பட்டன.

<<<<>>>>

உலகின் பிரபலமான கட்டடக்கலை நிபுணர் Frank Gehry அமெரிக்காவின் Santa Monica-வில் இன்று காலமானார். அவருக்கு வயது 96.

கனடாவில் பிறந்த அவர் உலகின் பிரபல கட்டிடங்களை வடிவமைத்தவர் என்ற சிறப்பைப் பெற்றவராவார்.

Face Book நிறுவனத்தின் தலைமையகம், லாஸ் ஏஞ்சல்சில் உள்ள Walt Disney அரங்கம் போன்றவை இவரது கட்டிட வடிவமைப்பில் உருவானது ஆகும்.

<<<<>>>>

பாகிஸ்தான் - ஆஃப்கனிஸ்தான் படைகளுக்கு இடையே நேற்று மீண்டும் மோதல் ஏற்பட்டது.

எல்லைப் பகுதியில் இருநாட்டு வீரர்களும் துப்பாக்கி சண்டையில் ஈடுபட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சண்டை நிறுத்த ஒப்பந்தத்தை மீறி இந்த தாக்குதல் நடைபெற்றுள்ளதாக அந்த தகவல்கள் கூறுகின்றன.

<<<<>>>>

ரஷ்யா மீதான நடவடிக்கை குறித்து ஜி-7 நாடுகளும், ஐரோப்பிய யூனியனும் விவாதித்து வருகின்றன.

யுக்ரைன் மீது மேற்கொண்ட ராணுவ நடவடிக்கைக்காக ரஷ்யாவின் எண்ணெய் ஏற்றுமதிக்கு தடை விதிப்பது குறித்து இதில் விவாதிக்கப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

பிரான்சில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களுக்கான முன்னேற்பாடுகளை மேற்கொண்டு வந்தவர்கள் மீது வாகனம் மோதியதில் 10 பேர் உயிரிழந்தனர். 19 பேர் காயமடைந்தனர்.

Guadeloup மாகாணத்திற்கு உட்பட்ட பகுதியில் இந்த விபத்து நேரிட்டதாக அந்நாட்டு காவல்துறையினர் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் 3 பேரின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளது என்றும் அவர்கள் கூறினர்.

<<<<>>>>

Super Pog செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Samay Raina பட்டம் வென்றார்.

இணையம் வாயிலாக நடைபெற்ற இப்போட்டியின் இறுதியாட்டத்தில் அவர், Sardoche-ஐ வென்றார்.

----------------

இந்தியா - தென்னாப்பிரிக்கா இடையேயான 3வது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

விசாகப்பட்டினத்தில் பிற்பகல் ஒன்றரை மணிக்கு இப்போட்டி தொடங்குகிறது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்று சமநிலையில் உள்ளன.

--------------

துபாயில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா - Rashmikaa Bhamidipaty இணை, அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 4-6, 6-4, 10-8 என்ற செட் கணக்கில் ரஷ்யாவின் Pridankaina - Yashina இணையை வென்றது.

<<<<The End>>>>